**முதன்மை மாவட்ட நீதிமன்றம், செங்கல்பட்டு**

| | | | | |
|---|---|---|---|---|
| **வழக்கு எண்** | OS | 180 | of | 2019 |

**2025-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 24-ம் நாளான இன்று**

**வாதி/பிரதிவாதி மனுதாரர்/எதிர்மனுதாரர்** **தரப்பில் வா.சா. -வது சாட்சியின் வாக்குமூலமானது 1973 ம் ஆண்டின் சட்டத்தின் விதிமுறைகளுக்கு உட்பட்டு திரு.நாகராஜன், Bench Clerk Grade-I என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு உறுதி செய்யப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | பவானி | **தந்தை பெயர்** | |
| **கிராமம்** | | **கணவர் பெயர்** | |
| **ஜாதி** | | **தாலுக்கா** | |
| | | **சமயம்** | |
| **தொழில்** | | **வயது** | |

**நாள்-24.10.2025**

**வா.சா.-1**

**2,3 பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை-**

வா.சா.ஆ.20 காசோலையை 1ம் பிரதிவாதி வாங்கிய கடனுக்காக என்னிடம் கொண்டுவந்து கொடுத்தார். ஆகஸ்ட் 2018 ல் காசோலை என் கைக்கு வந்தது. ஒரு மாதம் கழித்து அவர் வங்கியில் போடச் சொன்னார். அதன்படி ஒரு மாதம் கழித்து வங்கியில் தாக்கல் செய்தேன். 2,3 பிரதிவாதிகள் கையொப்பம் இட்டுள்ள ஆவணங்கள் எதுவும் இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் 2,3 பிரதிவாதிகள் எனக்கும் 1ம் பிரதிவாதிக்கும் அனுப்பியுள்ள இமெயில் ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்குரையிலும் என் முதல்விசாரணையிலும் 2,3 பிரதிவாதிகள்

குறித்து சொல்லியிருக்கிறேன். 1ம்பிரதிவாதி பெற்ற தொகைக்காகத்தான் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 2,3 பிரதிவாதிகள் பணம் தரவேண்டும் என்று வழக்குரையிலோ முதல் விசாரணையிலோ சொல்லவில்லை என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதிக்காக 2ம் பிரதிவாதி காசோலை கொடுத்தார். 1ம் பிரதிவாதிக்கு 3ம் பிரதிவாதிக்கும் இடையில் தொழில் ரீதியாக தொடர்பு உள்ளது என்பதை காட்ட ஆவண ஆதாரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வா.சா.ஆ.33 முதல் 39 வரை யாரிடம் இருந்து மெயில் வந்தது என்பதற்கும், கையொப்பத்திற்கும் தகவல்கள் உள்ளன. என்னுடைய பிரமான வாக்குமூலத்தில் ஜெயம் டிரான்ஸ்போர்ட் பற்றி சொல்லியிருக்கிறேன். 2ம் பிரதிவாதி வேல்மணி ஜெயம் டிரான்ஸ்போர்ட்-ல் பங்குதாரராக உள்ளார். ஆனால் ஜெயம் டிரான்ஸ்போர்ட் தரப்பினர் இல்லை. அஜந்தா ரோட் கேரியர் வழக்கில் தரப்பினராக இல்லை. ஆனால் அதுவும் 1,2 பிரதிவாதிகள் தான் நடத்தினர். வழக்கு தொகையை அடைக்கதான் காசோலை கொடுக்கப்பட்டது என்பதற்கு ஆதாரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் காசோலை குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதி 1 சார்பாக 2,3 பிரதிவாதிகள் தொகை எதுவும் கொடுக்க ஒப்புக் கொண்டதாக தனிப்பட்ட ஆதாரம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். காசோலை மட்டும் கொடுத்தார்கள். 2,3 பிரதிவாதிகளுக்கு என்னுடன் தொழில் ரீதியாக எந்ததொடர்பும் இல்லை என்றும், எந்தசூழ்நிலையிலும் காசோலை கொடுக்கப்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. 2,3 பிரதிவாதிகள் தொகை எதுவும் தரவேண்டியதில்லை என்றால் சரியல்ல. 2,3

பிரதிவாதிகள்  அவசியமற்ற தரப்பினர் என்றால் சரியல்ல. 2,3 பிரதிவாதிகளை பொறுத்து

தாவா தள்ளுபடிக்குரியது என்றால்சரியல்ல.

மறுவிசாரணை-இல்லை.

T
CHANDRASEKARAN

Digitally signed by T
CHANDRASEKARAN
Location: Principal
District Judge,
Chengalpattu